بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : மெல்போர்ன், ஆஸ்திரேலியா**

October 11 2013

**தமிழாக்கம் : மவ்லவி S. அப்துல் காதிர் சாஹிப்**

# பைஅத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற முயலுங்கள்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:** ஈமானை உறுதிப்படுத்துவதும், இறைவனின் இருப்பை மக்களுக்கு நிரூபிப்பதும் எனது வருகையின் நோக்கமாகும். ஏனெனில் எல்லா சமுதாயத்தின் நிலையும் மிகவும் பலவீனமாகி விட்டது. மறுமை என்பது வெறும் கட்டுக்கதை என்றே நம்பப்படுகிறது. உலகத்தின் மீதும் அதன் சுகபோகங்களின் மீதும் உள்ள அளவிற்கு, நம்பிக்கையும் நேசமும் இறைவனின் மீதும் இறுதி நாளின் மீதும் இல்லை என்பதை ஒவ்வொரு மனிதரின் செயல்களும் நிரூபிக்கின்றன. நாவுகளில் ஏராளமான பேச்சுக்கள் உள்ளன. ஆனால் உள்ளங்களிலோ உலகத்தின் மீதுள்ள நேசம் மிகைத்துள்ளது. *ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் இந்த நிலையில்தான் யூதர்கள் இருக்கக் கண்டார்கள்.* ஈமானின் பலவீனத்தின் விளைவாக யூதர்களின் நல்லொழுக்க நிலைகளும் மிகவும் மோசமாக இருந்தன. இறைவனின் மீதுள்ள நேசம் நீங்கி விட்டது. இப்போது என்னுடைய காலகட்டத்திலும் இதுவே நிலையாகும். ஆகவே சத்தியம் மற்றும் ஈமானின் காலம் மீண்டும் வந்திடவும், உள்ளங்களில் இறையச்சம் உருவாகிடவும் நான் தோன்றியுள்ளேன். இதுவே எனது வருகையின் முக்கிய குறிக்கோளாகும். “வானம் மீண்டும் பூமிக்கு அருகில் வரும். அது மிக தூரம் சென்ற பிறகு” என்று எனக்கு கூறப்பட்டுள்ளது.

நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததாக வாதம் புரிகிறோம். நாம் எந்த அளவுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்கிறோம் என்று நாம் நம்மையே ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

நான் ஈமானை உறுதிப்படுத்த வந்துள்ளேன் என்று அவர்கள் கூறினார்கள். எனவே நமது ஈமான் உறுதிப்பாட்டின் பக்கம் வளர்ந்து வருகிறதா? என்று நாம் நம்மையே ஆய்வு செய்ய வேண்டும். இறைவனின் இருப்பு நிரூபணம் ஆவதன் மூலம் ஈமான் உறுதி பெறும் என்று அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் மீது முழுமையான உறுதிப்பாட்டின் மூலம் ஈமான் உறுதி பெறுகிறது. உலகத்தின் மீதுள்ள மோகம் இன்றைய காலத்தில் அதிகரித்து வருகிறது. இறைவனின் பக்கம் சிந்தனை அதிகரிப்பதற்குப் பதிலாக உலகத்தின் பக்கம் சிந்தனை அதிகரிக்கிறது. இறைவனின் மீது இருக்க வேண்டிய உறுதிப்பாடு இரண்டாம் பட்சமாக மதிக்கப்படுகிறது. உலகப் பொருட்கள் அதிக முக்கியத்துவம் பெற்று விட்டன. நாம் அக்கம் பக்கம் பார்வையிட்டால் இந்த நிலைதான் எங்கும் தென்படுகின்றது.

ஆனால் இன்று உலகம், பௌதீகப் பொருட்களையே நம்புகின்றது என்று அறிந்து கொள்வதற்காக மட்டும் அக்கம் பக்கம் பார்வையிடக் கூடாது. மாறாக நாம் உலகச் சாதனங்களின் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளோமா அல்லது இறைவனின் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளோமா? என்று நம்மை ஆய்வு செய்வதற்காகப் பார்வையிட வேண்டும். நாம் பைஅத் செய்த பிறகும் இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டிய அளவிற்கு அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்றால் நமது பைஅத் பலனற்றதாகும்; நாம் நம்மை அஹ்மதி என்று கூறுவதும் மதிப்பற்றதாகும். இன்று நாம் இறைவனை மகிழ்விப்பதை விட அதிக முக்கியத்துவமாகக் கருதி உலக எஜமானர்களை மகிழ்விக்கிறோம் என்றால், நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக மாட்டோம்; அவர்களிடம் செய்த வாக்குறுதியையும் நிறைவேற்றுபவர்களாக மாட்டோம். நாம் உலக சடங்கு சம்பிரதாயங்களுக்கு மார்க்கப் போதனைகளை விட அதிக முக்கியத்துவம் வழங்கினால் நாம் நம்மை அஹ்மதிகள் என்று கூறுவதில் எந்தப் பலனும் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நாம் இறைவனின் மீது நம்பிக்கை கொள்கிறோம். இறைவனையே எல்லாரையும் விட பெரியவன் என்று நம்புகிறோம். அல்லாஹ்வின் மீதுள்ள நேசம் மற்ற எல்லா நேசத்தையும் விட மிகைத்துள்ளது என்றெல்லாம் நாம் நாவினால் கூறுகிறோம். ஆனால் செயல்பூர்வமாகப் பார்த்தால் நமது உள்ளத்தில் உலக மோகம் தான் மிகைத்துள்ளது. நமக்கு பக்கத்தில் நாலாபுறமும் முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆகிய ஒவ்வொருவரும் உலகப் பேராசையில் மூழ்கியுள்ளனர். உலகத்தின் கேளிக்கைகளும் வெட்கக்கேடுகளும் இறைவனை நினைவு கூர்வதைப் பின்னால் தள்ளி விட்டன.

முஸ்லிம்களுக்கு ஐவேளை தொழுகைகளுக்கான கட்டளை உள்ளது. அல்லாஹ்வின் விருப்பம் மற்றும் அன்பின் காரணமாக இந்த இறைவணக்கத்தின் கட்டளை உள்ளது. ஆனால் நமது செயல்பூர்வமான நிலை இதற்கு நேர் மாற்றமாக உள்ளது. இந்த அடிப்படையில் **ஓர் அஹ்மதி பிறரைப் பார்க்கும் போது, முதலில் தமது நிலையை ஆய்வு செய்வது அவசியமாகும்.** நாம் நமது தொழுகைகளை இறைவனின் கட்டளைகளின் அடிப்படையில் தொழுகிறோமா? இல்லையா? அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நாம் நமது இறைவணக்கங்களைச் செலுத்துகிறோமா? இல்லையா? இல்லையென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நோக்கமாகிய ஈமானை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை நாம் மறுக்கிறோம். சத்தியத்தின் காலத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்பதே அவர்களது வருகையின் நோக்கமாகும். மேலும் வானத்தை பூமிக்கு அருகில் கொண்டு வருவதே அவர்களது வருகையின் நோக்கமாகும். அதாவது இறைவனுடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்துவதே அவர்களது வருகையின் நோக்கமாகும்.

நிச்சயமாக நமது ஈமான் மற்றும் செயல்களின் குறைபாட்டால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதம் மறுக்கப்படுவதில்லை. ஆனால் அவர்களது தோற்றத்தின் மூலம் இறைவன் வழங்கிய அருட்களைப் பெறக்கூடியவர்களாக நாம் ஆக முடியாது. அப்படியென்றால் நாம் ஈமான் கொண்டோம் என்று கூறுவதும் வெறும் வாய்ப்பேச்சு மட்டுமே ஆகும்.

எனவே, ஒருவர் மற்றவரைப் பார்த்து அவருடைய ஈமானின் நிலை எப்படி இருக்கிறது? அவருடைய செயல்களின் நிலை எவ்வாறு உள்ளது? அதில் என்ன பலவீனம் உள்ளது? என்பதை ஆராய்வதற்குப் பதிலாக ஒவ்வொரு அஹ்மதியும் தன்னைத் தானே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவர் தாம் என்ன செய்கிறோம்? என்றும், எந்த அளவு பைஅத் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிறோம் என்றும், எந்த அளவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குறிக்கோளை நிறைவேற்றுகிறோம்? என்றும், எந்த அளவு நல்ல காரியங்களைச் செய்ய முயற்சி செய்து வருகிறோம்? என்றும், எந்த அளவு நமது நல்லொழுக்க நிலைகளைச் சீர்திருத்துகிறோம்? என்றும், நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முன்னுரிமை வழங்குவேன் என்று நாம் செய்த வாக்குறுதியை எந்த அளவு நிறைவேற்றுகிறோம்? என்றும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம் முன்னால் பைஅத்தின் பத்து நிபந்தனைகளை வைத்தார்கள். நீங்கள் எனது ஜமாஅத்தில் இணைய விரும்பினால் அல்லது உண்மையான முறையில் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருக்க விரும்பினால் பிறகு என்னுடன் உறுதியான தொடர்பு கொள்ள வேண்டும். பைஅத்தின் இந்த பத்து நிபந்தனைகளைப் பின்பற்றி நடந்தால் தான் இதைச் செய்வது சாத்தியமாகும். இதனால் உங்களது ஈமானும் உறுதிப்படும். உங்களது நல்லொழுக்க நிலைகளும் வளர்ச்சி பெறும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகவும் வேதனையோடும், வலியுறுத்தியும் அறிவுரை கூறியுள்ளார்கள். நீங்கள் என்னைச் சார்ந்தவர்கள் என்றும் என்னிடம் பைஅத் செய்தவர்கள் என்றும் கூறுகிறீர்கள் என்றால், என்னிடம் பைஅத் செய்த பிறகு உங்களுடைய வாழ்க்கையில் தூய மாற்றம் ஏற்படவில்லை என்றால் உங்களுக்கும் பிறருக்கும் மத்தியில் எந்த வித்தியாசமும் இல்லை. ஆகவே நமது நன்மைகளின் தரம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு உயர வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மிடம் பைஅத் செய்தவர்களுக்கு பல்வேறு சமயங்களில் அறிவுரை கூறினார்கள். அவற்றை நான் எடுத்துரைக்கிறேன். **அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

சம்பிரதாய அடிப்படையில் பைஅத் செய்வது பயனளிக்காது. இப்படி பைஅத் செய்வதால் இறைவனின் அருளைப் பெற முடியாது. பைஅத் செய்வதற்காக அல்லாஹ் விதித்துள்ள அருட்கொடைகளைப் பெற முடியாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அன்பு மற்றும் நல்லொழுக்கத்துடன் தன்னை வளர்ச்சி அடையச் செய்து பைஅத் செய்தவருடன் (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் – மொழிபெயர்ப்பாளர்) இணைந்து விட வேண்டும். இறைவனுடன் உறுதியான தொடர்பு கொள்ள வேண்டும். இந்த தொடர்புகளை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். (நேர்வழியைத்) தேடுபவர் இந்த தொடர்பை வளர்த்துக் கொள்ளவில்லை என்றால், அதாவது அல்லாஹ்வுடனும் அவர் யாரிடம் பைஅத் செய்துள்ளாரோ அவருடனும் தொடர்பை வளர்த்துக் கொள்ள வில்லை என்றால் அவருடைய புகார் பயனற்றதாகும். அதாவது இறைவன் வாக்குறுதி அளித்த அருட்கொடை எனக்கு கிடைக்கிறது என்று கூறுவதும் பயனற்றதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முடிந்த வரை அன்பு மற்றும் விசுவாசத்தின் தொடர்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். மனிதன் தனக்கு நேர்வழி காட்டுபவருடன் ஒன்றிவிட வேண்டும். கொள்கை அடிப்படையிலும், செயல் அடிப்படையிலும் ஒன்றிவிட வேண்டும்.

அதாவது யாரிடம் பைஅத் செய்துள்ளீர்களோ அவருடைய வழியைப் பின்பற்றுங்கள். மேலும் கொள்கைகளை நம்புவதன் அடிப்படையிலும் அவர் எதிர்பார்க்கும் தரத்தை அடையுங்கள். மற்றும் இறை வணக்கத்தின் பால் விரைவாக குனிய வேண்டும். நீங்கள் என்ன பெற்றீர்கள் என்று காலை முதல் மாலை வரை உங்களை ஆயவு செய்து பாருங்கள்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: பைஅத் செய்வதால் மட்டும் இறைவன் திருப்தி கொண்டு விடுகிறான் என்று எண்ணாதீர்கள். இது வெறும் தொலி ஆகும்; சத்து இதன் உள்ளே இருக்கிறது. வெளியே தொலியும் உள்ளே சத்தும் இருப்பது தான் பெரும்பாலும் இயற்கை நியதியாகும். தொலி எதற்கும் பயன்படுவதில்லை. சத்து தான் பயன்படுகிறது. சிலவற்றில் சத்து இருப்பதே இல்லை. உள்ளே மஞ்சள் கருவும், வெள்ளை கருவும் இல்லாமல் காற்று மட்டும் கொண்ட முட்டையை சில நேரம் கோழி இடும். அது எதற்கும் பயன்படாது. அந்த ஓடு குப்பையைப் போன்று எறியப்படுகிறது. அவ்வாறே பைஅத் செய்து ஈமான் கொண்டதாக வாதம் புரிந்து அதனுள் சத்து ஏதுமில்லை என்றால், அதாவது பைஅத் மற்றும் ஈமானின் உண்மைத்துவம் தெரியாமல் இருந்தால், அதன்படி செயல்களும் இல்லையென்றால் அவர் அச்சம் கொள்ள வேண்டும். நேரம் வரும் போது இலேசாக மோதினாலும் காற்று முட்டையைப் போன்று அவர் உடைந்து நொறுங்கி விடுவார். பிறகு அவர் எறியப்பட்டு விடுவார்.

ஆகவே பைஅத் செய்து ஈமான் கொண்டதாக வாதம் புரியும் நபர் தன்னை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நான் வெறும் ஓடாக இருக்கிறேனா? அல்லது சத்தாக இருக்கிறேனா? என்று பார்க்க வேண்டும். சத்து உருவாகாத வரை ஈமான், அன்பு, கட்டுப்பாடு, பைஅத், நம்பிக்கை, கீழ்படிதல், மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் புரிபவர் உண்மையாளர் அல்ல. நான் ஈமான் கொண்டுள்ளேன்; நான் நேசம் கொள்கிறேன்; நான் முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவன்; நான் பைஅத் செய்து விட்டேன்; நான் நம்பிக்கை கொள்கிறேன்; நான் முஸ்லிம் ஆவேன் என்று கூறுவது யாவும் வெறும் வாய்ப்பேச்சு மட்டுமே ஆகும்.

எனவே பைஅத் செய்த பிறகு ஈமானில் வளர்ச்சி பெற வேண்டும். நேசத்திலும் வளர்ச்சி பெற வேண்டும். அல்லாஹ்விடம் உள்ள நேசம் எல்லா நேசத்தை விடவும் அதிகமாக இருக்க வேண்டும். இதையே இறைவன் கூறியுள்ளான். அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வதன் காரணமாக அவனது நேசத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் மீது அன்பு இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அன்பு இருக்க வேண்டும். கிலாஃபத்துடன் அன்பு இருக்க வேண்டும். மேலும் பரஸ்பரம் ஒருவரோடு ஒருவர் அன்புடன் இருக்க வேண்டும்.

பிறகு கூறினார்கள்: கட்டுப்படும் தரத்தைப் பெற வேண்டும். கட்டுப்படுதல் என்பது காலத்தின் கலீஃபா மற்றும் ஜமாஅத் அமைப்பு வழங்கும் தீர்ப்பில் தம் விருப்பத்தின்படி உள்ளதை ஏற்றுக் கொண்டு, தம் விருப்பத்திற்கு மாறாக உள்ளவற்றிற்கு சுய விளக்கங்கள் கொடுப்பதும், அதை ஆட்சேபனை செய்வதும் கட்டுப்படுதல் ஆகாது. கட்டுப்படுவது என்று வந்து விட்டால் முழுமையாகக் கட்டுப்பட வேண்டும்.

ஆகவே பைஅத்திற்கான வாதம், நம்பிக்கை கொண்டதற்கான வாதம், முஸ்லிம் ஆவதற்கான வாதம் எப்போது உண்மையான வாதம் ஆகும் என்றால், இன்று பைஅத் செய்த பிறகு என்னுடையது ஏதுமில்லை. மாறாக எல்லாம் இறைவனுடையதாகி விட்டது என்று அறிவிக்க வேண்டும். எல்லாம் இறைவனுடையதும் அவனது மார்க்கத்திற்காகவும் ஆகும் என்று அறிவிக்க வேண்டும். இதுவே பைஅத் செய்வதற்கான நோக்கமாகும்.

**பிறகு ஒரு தோழருக்கு அறிவுரை கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பைஅத் செய்த பிறகு வாழ்வில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். **பைஅத் செய்த பின் தம் வாழ்வில் தூய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்றால் இது பைஅத்தை ஏளனம் செய்வதாகும். பைஅத்தை குறைத்து மதிப்பிடுவதாகும்.** பைஅத் என்பது சிறு குழந்தைகளின் விளையாட்டு அல்ல. பைஅத் நம்மிடம் சிலவற்றை எதிர்பார்க்கின்றது. தம் முந்தைய வாழ்வில் மரணத்தை ஏற்படுத்துபவரே உண்மையில் பைஅத் செய்தவராவார். பைஅத் செய்வதால் ஒரு புதிய வாழ்வு பிறக்கிறது. ஒவ்வொரு செயலிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் தூய மக்களை வழங்குகிறான். அவர்கள் தம்மில் தூய மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர். அவர்களின் இந்த தூய மாற்றங்களை அந்நியர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

**ஃபுர்கினோஃபாஸோவின் நமது ஒரு முபல்லிக் எழுதுகின்றார்கள்:**

ஒருமுறை தீனியா என்ற ஊருக்கு சுற்றுப்பயணம் சென்றார்கள். இந்த ஜமாஅத் மாலியின் எல்லையில் அமைந்துள்ளது. இங்கு ஜமாஅத்திற்கு அதிகமான எதிர்ப்பு இருந்து வருகிறது. ஏனெனில் அங்கும் வஹாபிகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. அங்குள்ள ஒரு பள்ளிவாசலின் இமாம், இஸ்ராகூ யாகூபூ சாஹிப் கூறினார். இவர் பாகிஸ்தானிய மவ்லவிகளைப் போன்று உண்மையை மறுப்பவர் இல்லை. குறைந்தபட்சம் இவரிடம் இந்த நன்மை இருக்கிறது. அதாவது, அவர் கூறுகிறார். (அஹ்மதிகளை) எதிர்த்து வந்த போதிலும் நாம் ஒன்றை ஏற்றுக் கொள்கிறோம். இந்த ஊரில் மூன்று சிறந்த முஸ்லிம்கள் உள்ளனர். இந்த மூவரும் நமக்கு நல்ல முன்மாதிரி ஆவார்கள். இந்த மூன்று நபர்களும் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இவ்வாறு இறைவன் எதிரிகள் கூட இவ்வாறு சொல்வதை தவிர்க்க முடியாததாக ஆக்கி விட்டான். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் சேர்ந்தவுடன் மக்களிடம் உண்மையான மற்றும் தூய்மையான மாற்றம் ஏற்பட்டது. எனவே பைஅத்தின் உண்மைத்துவத்தையும் புரிந்து பைஅத் செய்பவர்கள் பிறருக்கு நல்ல முன்னுதாரணமாக ஆகிவிடுகின்றனர். இந்த முன்மாதிரி தான் பிறகு தப்லீகிற்கான வழியைத் திறக்கிறது. தப்லீக் மைதானத்தை விரிவடையச் செய்ய வேண்டும் என்றால், உங்களில் ஒவ்வொருவரும் யார் எங்கிருந்தாலும் இந்த நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் மக்களின் கவனம் உங்களை நோக்கித் திரும்பும் அளவிற்கு உங்களுடைய முன்மாதிரியை நிலைநாட்டிட வேண்டும். இதன் விளைவாக பின்னர் தப்லீகிற்கான மைதானம் திறக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அவர்கள் தாம் எதிர்பார்த்ததன் படி உயர்ந்த முன்மாதிரியின் தரத்தை நிலைநாட்ட வேண்டும். ஓர் உண்மையான அஹ்மதியின் தரத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

வானவர்களும் தம்மைக் கட்டித் தழுவும் அளவிற்கான உயர்ந்த தரத்தை மனிதன் அடைய வேண்டும். நம்மிடம் பைஅத் செய்வதால் ஒவ்வொரு அஹ்மதியிடமும் இந்த நிலை ஏற்பட வேண்டும். அதாவது இறைவனின் அச்சமும், மகத்துவமும், வல்லமையும் எப்போதும் உள்ளத்தில் நிலைத்திருக்க வேண்டும். இதனால் பாவங்கள் விலகி விடும்.

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:**

**உலகவாதிகளைப் போன்று நீங்கள் நடந்து கொண்டால் நீங்கள் எனது கையில் பைஅத் செய்ததற்கு எந்தப் பயனும் இல்லை. எனது கையில் தவ்பா செய்வது ஒரு மரணத்தை எதிர்பார்க்கின்றது.** இதனால் நீங்கள் புதிய வாழ்வில் மறுபடியும் ஒரு பிறப்பைப் பெற வேண்டும். உள்ளத்தால் பைஅத் செய்யவில்லை என்றால் இதற்கு எந்தப் பயனும் இல்லை. எனது பைஅத்தை இறைவன் உள்ளத்தால் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். எனவே உண்மையான உள்ளத்துடன் என்னை ஏற்றுக் கொள்பவரை பாவங்களை மன்னிப்பவனும் கருணையாளனுமாகிய இறைவன் அவரை நிச்சயமாக மன்னித்து விடுகிறான். இதனால் அவர் தன் தாயின் வயிற்றில் பிறந்தது போல் ஆகி விடுகின்றார். அப்போது வானவர்கள் அவரை பாதுகாக்கின்றனர். தவ்பாவின் இந்த தரத்தை நம்மில் ஒவ்வொருவரும் தம்மில் உருவாக்கிட முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த ஜமாஅத்தில் இணைந்து உங்களுடைய தன்மை தனிப்பட்டதாகி விட வேண்டும். நீங்கள் ஒரு புதிய வாழ்க்கையை வாழ்பவர்களாக ஆகிவிட வேண்டும். முன்பு இருந்ததைப் போன்று இருக்காதீர்கள்.

இன்னோரிடத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்: பைஅத்தின் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன்படி வழிநடக்க வேண்டும். பைஅத் செய்தவர் தன்னில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதும், தன் உள்ளத்தில் இறையச்சத்தை ஏற்படுத்துவதும் பைஅத்தின் உண்மைத்துவமாகும். உண்மையான நோக்கத்தைத் தெரிந்து கொண்டு தன் வாழ்வில் ஒரு தூய முன்மாதிரியை செய்து காட்ட வேண்டும். இது இல்லையென்றால் பைஅத்தின் மூலம் எந்த பலனும் கிடையாது. மாறாக இந்த பைஅத் அவருக்கு இன்னும் தண்டனைக்கு காரணமாக அமைந்து விடும். ஏனெனில் உடன்படிக்கை செய்து விட்டு வேண்டுமென்றே நன்றாகப் புரிந்து கொண்டே நிராகரிப்பது மிகவும் அபாயகரமானதாகும்.

**பிறகு ஓரிடத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்:**

பைஅத் செய்வதன் அர்த்தம் பைஅத்தின் தத்துவத்தைப் புரிந்து கொள்வதே ஆகும். ஒருவர் நேரில் வந்து கை மீது கை வைத்து பைஅத் செய்கிறார். ஆனால் அவர் பைஅத்தின் குறிக்கோளைப் புரிந்து கொள்ளவில்லை. அல்லது அதை பொருட்படுத்தவில்லை என்றால் அவரது பைஅத் பயனற்றதாகும்.

கை மீது கை வைத்து நேரடியாக வந்து பைஅத் செய்கிறார். அதன் குறிக்கோளை அவர் அறிந்து கொள்ளவில்லை என்றால், அது பயனற்றதாகும். இறைவனின் பார்வையில் இதற்கு எந்த மதிப்புமில்லை. ஆனால் இன்னொருவர் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உட்கார்ந்து கொண்டு உண்மையான உள்ளத்துடன் பைஅத்தின் தத்துவதையும் குறிக்கோளையும் ஏற்றுக் கொண்டு பைஅத் செய்கிறார். மேலும் அந்த உடன்படிக்கையின் படி செயல்பட்டு தனது செயல்களை சீர்திருத்துகிறார் என்றால் நேரடியாக வந்து கையில் பைஅத் செய்து விட்டு பைஅத்தின்படி செயல்படாத மனிதரை விட ஆயிரம் மடங்கு சிறந்தவர் ஆவார்.

ஆகவே இதுவே பைஅத்தின் உண்மைத்துவமாகும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது வருகையின் குறிக்கோளை நிறைவேற்றுவது ஆகும். பைஅத்தின் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்வதும் அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களால் வரையறுக்கப்பட்ட பைஅத்தின் பத்து நிபந்தனைகளையும் சிந்தித்துப் பார்த்தால் தான் பைஅத்தின் உண்மைத்துவத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும். மேலும் அதன்படி செயல்பட்டால் தான் புரிய முடியும். ஆப்பிரிக்காவின் தொலைதூரப் பகுதியில் இருக்கும் மக்கள் தமது சுற்றுப்புறத்தில் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்வதை நான் உதாரணமாக எடுத்துக் கூறினேன். உண்மையான முஸ்லிமைப் பார்க்க வேண்டும் என்றால் இந்த அஹ்மதிகளிடம் பாருங்கள் என்று கூறும் அளவிற்கு எதிரிகளும் தள்ளப்பட்டுள்ளனர். ஆக இந்த முன்மாதிரியை நாம் நிலைபெறச் செய்வது அவசியமாகும்.

**புதிதாக பைஅத் செய்தவர்களுடைய சில உதாரணங்களை நான் மேலும் எடுத்துக் கூறுகிறேன்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எழுதிய பைஅத்தின் பத்து நிபந்தனைகளில் ஒன்று, அன்பு மற்றும் நேசத்தின் இந்த சகோதர உடன்படிக்கை மற்ற எல்லா உலகத் தொடர்புகளையும் விட உயர்வானதாக இருக்கும் என்பதாகும். உலகின் தொலை தூரங்களிலுள்ள மக்கள் இன்றும் வாய்ப்பு கிடைக்கும் போது இதை வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். அல்லாஹ் அவர்களின் உள்ளத்தை எவ்வாறு ஈமானால் நிரப்பியுள்ளான்!

ரஷ்ய நாடுகளிலும் புதிதாக பைஅத் செய்பவர்கள் அல்லாஹ்வின் அருளால் தமது ஈமானிலும் தூய விசுவாசத்திலும் அசாதாரணமாக முன்னேறி வருகின்றனர். இவர்களில் ஒரு சிலர் கடந்த வருடம் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டனர். திரும்பி தம் நாட்டிற்கு வந்ததும் அவர் தமது அனுபவத்தை எழுதி அனுப்பினார்கள். அதில் ஒருவர் இவ்வாறு எழுதுகிறார்:

இந்த அருளுக்குரிய ஊரைப் பற்றி நூல்களில் படித்துள்ளேன். டி.வி.யிலும் பார்த்திருந்தேன். ஆனால் எங்களது காலடி அந்த புன்னிய பூமியில் பட்டதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்திலிருந்த அதே சூழ்நிலை எங்களிடமும் ஏற்பட்டது. இங்கு மூச்சு விடுவது மிகவும் எளிதாக இருந்தது. மனிதன் உலகம் மற்றும் அதிலுள்ள சுகபோகங்களை விட்டு விலகி தன்னையே மறந்து விடுகிறான். மனிதனின் சிந்தனைகள் கூட அல்லாஹ்வை வணங்குவதில் மூழ்கி விடுகிறது. அங்கே நாங்கள் பார்த்ததையும் அனுபவித்ததையும் வார்த்தைகளில் எடுத்துரைப்பது கடினமாகும்.

பிறகு ஒரு நண்பர் எழுதுகிறார்: அல்லாஹ்வின் அருளால், எனக்கு காதியான் செல்வதற்கும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைகளின்படி இறுதிக் காலத்தின் மஹ்தி (அலை) அவர்களுக்கு ஸலாம் கூறுவதற்கான நல்வாய்ப்பும் கிடைத்தது. நான் முதன்முறையாக அஹ்மதிய்யா பள்ளிவாசலில் பாங்கு ஓசையைக் கேட்டேன். ரஷ்யாவிலும் பள்ளிவாசல்களில் பாங்கு சொல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. நான் எனது சுமைகளை வேகமாக வைத்து விட்டு உளூ செய்து, இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பள்ளிவாசலாகும் என்று

எண்ணி இரண்டு ரக்அத் தொழுது விட்டு, ஓர் அஹ்மதி சகோதரரிடம் இது இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பள்ளிவாசலா? என்று கேட்டேன். அதற்கு அவர், இல்லை. இது தாருல் அன்வார் பள்ளிவாசலாகும் என்று கூறினார். இதனால் நான் கவலையடைந்து எனது பிற சகோதரர்களிடம் சென்று அதை கூறினேன். நாங்கள் ஃபஜ்ர் தொழுகையை அந்தப் பள்ளிவாசலில் தொழுதோம். பிறகு இமாம் மஹ்தி (அலை) அவர்களின் கபரை ஸியாரத் செய்யச் சென்றோம். அங்கு துஆ செய்தோம். அப்போது நான் இறைவனுக்கு நன்றி கூறும் உணர்வுடன் நிரம்பி இருந்தேன். அந்த உணர்வை என்னால் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. அதன் பிறகு நாங்கள் காதியானில் எல்லா பக்கமும் சுற்றினோம். இமாம் மஹ்தியின் பள்ளிவாசல், பைத்துல் ஃபிக்ர், பைத்துத் துஆ, இமாம் மஹ்தி (அலை) அவர்கள் பிறந்த வீடு, வாழ்ந்த வீடு, அவர்கள் நோன்பு நோற்ற அறை, மஸ்ஜித் நூர் போன்ற இடங்களுக்குச் சென்றோம். அங்கு துஆ செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. அப்போது ஏற்பட்ட நிலையை சொற்களால் எடுத்துக் கூற முடியாது. வேறொரு உலகில் இருப்பது போல் இருந்தது. இன்னும் எல்லா முக்கிய இடங்களுக்கும் சென்றோம். இதன் காரணமாக நான் என்னை மிகவும் அதிர்ஷ்டசாலி என்று கருதுகிறேன்.

இவ்வாறான மக்கள் உலகின் பல்வேறு இடங்களில் பரவியுள்ளனர். இன்னும் பலருக்கு காதியான் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் தூய்மை மற்றும் விசுவாசத்தால் இவர்களும் நிரம்பியுள்னர். இவர்களின் கடிதங்கள் வருகின்றன. இவர்களின் தூய்மை மற்றும் விசுவாசத்தின் உணர்வைக் கண்டு வியப்பு ஏற்படுகிறது. இவர்களுக்கு தமது உலக தேவைகளை விட அதிகமாக ஆன்மீகத்தைப் பற்றிய கவலை உள்ளது.

நான் கடந்த நாட்களில் சிங்கப்பூர் சென்றிருந்தேன். அங்கு இந்தோனேஷியாவிலிருந்தும் பலர் வந்திருந்தனர். ஏழைகளான அவர்கள் மிகவும் நீண்ட பயணம் மேற்கொண்டு வந்திருந்தனர். அவர்களில் சிலரிடம் பயணத்திற்கான பணம் இல்லை. ஆனால் அவர்களிடம் இருந்த சிறிய நிலத்தை விற்று அந்த தொகையை வைத்து பயணம் செய்து சிங்கப்பூர் வந்திருந்தனர். அவர்கள் என்னிடம் துஆவிற்காக சொல்லும் போது எங்களது உலகத் தேவைகள் பூர்த்தி அடைய துஆ செய்யுங்கள் என்று கூறவில்லை. மாறாக எங்களுடைய சந்ததிகள் மார்க்கத்தில் நிலைத்திருக்க துஆ செய்யுங்கள் என்றே கேட்டுக் கொண்டனர். நாங்கள் பெற்ற இறை அருட்கொடை எங்களிடமிருந்து வீணாகி விடக் கூடாது என்றனர். இதுவே அந்த ஆண்கள் மற்றும் பெண்களின் உணர்வாக இருந்தது. அவர்களிடம் கிலாஃபத்தின் மீது அன்பும் எல்லையற்றதாக இருந்தது. அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் இந்த உணர்வு அவர்களிடம் அல்லாஹ்வுக்காக இருந்தது.

பிறகு இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கூறுகின்றேன். இதில் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதும் உள்ளது. மேலும் சகோதர உடன்படிக்கையைப் பேணுவதும் உள்ளது.

**ஃபிரான்ஸைச் சேர்ந்த அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்:**

புதிதாக பைஅத் செய்த மதிப்பிற்குரிய அப்துல் அஜீஸ் சாஹிப் கடந்த மூன்று நான்கு மாதங்களாக வேலை தேடிக் கொண்டிருந்தார். அவரிடம் ஜுன் மாத இறுதியில் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு நடைபெறும் என்று கூறப்பட்டது. அதில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் வருகை தருகிறார்கள் என்று கூறியதும் எப்படிப்பட்ட நிலையாக இருந்தாலும் அந்த மாநாட்டில் நான் கண்டிப்பாக கலந்து கொள்வேன் என்று கூறினார். கலீஃபத்துல் மஸீஹை சந்திக்க வேண்டும் என்று பெரிதும் விருப்பப்பட்டார். பிறகு ஜுன் 2ம் தேதி ஜெர்மனி செல்வதற்காக இவரிடம் மீண்டும் தொடர்பு கொண்ட போது இன்று தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருப்பதாக கூறினார். மேலும் அவர் தொடக்கத்தில் நான்கு நாட்கள் பணிக்கு வரவில்லை என்றால் அந்த வேலை பறிபோய்விடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளது எனவும் கூறினார். இவர் ஒரு புதிய அஹ்மதி ஆவார். இன்றைய நாட்களில் ஐரோப்பாவிலுள்ள சூழ்நிலையில் வேலை கிடைப்பது எளிதான காரியமல்ல. இலட்சக்கணக்கானோர் வேலையின்றி தவிக்கின்றனர். இருந்தபோதிலும், எப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலும் சரி கண்டிப்பாக ஜெர்மனி ஆண்டு மாநாட்டிற்குச் செல்வேன் என்று கூறினார். வேலை பறிபோனால் போகட்டும். நான் காலத்தின் கலீஃபாவை கண்டிப்பாக சந்திக்கச் செல்வேன் என்று கூறினார். அல்ஹம்துலில்லாஹ்! அவர் ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார். பைஅத் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.

**மாலியிலிருந்து நமது முபல்லிக் எழுதுகிறார்கள்:**

எங்களது பகுதியைச் சேர்ந்த ஒரு புதிய அஹ்மதி ஆதம் குலூப் அலி என்பவர் ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். ஒருநாள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கூட்டத்திற்காக அவர் அழைக்கப்பட்டார். அதே சமயம் அவரது நிறுவனத்தின் சார்பாகவும் ஒரு முக்கியமான கூட்டம் இருந்தது. இந்த கூட்டத்தில் இவர் கலந்து கொள்ளாத பட்சத்தில் அவர் வேலையை விட்டு அகற்றப்படுவார் என்ற அளவிற்கு இந்தக் கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஆனால் அவர் அதையும் பொருட்படுத்தாது ஜமாஅத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஜமாஅத்தின் கூட்டம் முடிந்ததும்

அவர் தம் நிறுவனத்தின் கூட்டத்திற்குச் செல்லும் போது வெகு நேரம் கழிந்திருந்தது. அந்த நிறுவனத்தின் முதலாளி இவர் மீது கடுமையான கோபம் கொள்வார் என்றே இவர் நினைத்தார். ஆனால் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முன்னுரிமை வழங்கும் இந்த அஹ்மதிய்யத்தின் தொண்டர் மீது கோபப்படுவதற்குப் பதிலாக அந்த முதலாளி இவருடைய பணிகளால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இவருக்கு இனாமாக ஒரு மோட்டார் சைக்கிளும் வழங்கினார். இந்த கௌரவம் தமக்கு அஹ்மதிய்யத்தின் அருளால் கிடைத்தது என்பது இந்த புதிய அஹ்மதியின் உறுதியான நம்பிக்கையாகும்.

மார்க்கத்திற்கு உலகத்தை விட அதிக முன்னுரிமை வழங்குவேன் என்ற தமது வாக்குறுதியை இவர் நிறைவேற்றினார். இதனால் அல்லாஹ்வும் அதிகமாக இவருக்கு வழங்கினான். இங்கும் சிலர் ஆண்டு மாநாட்டில் என்னைச் சந்தித்தனர். இவர்களில் ஓரிருவரை எனக்கு தெரியும். இவர்கள் ஃபிஜியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு புதிதாக வேலை கிடைத்திருந்தது. ஆனால் அதை அவர்கள் விட்டு வந்து மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். ஆனால் இங்கு சிலர் உள்ளனர். அவர்கள் தமது பணிகளின் காரணமாகவும் அல்லது அல்லது வேறு ஏதேனும் காரணத்தாலும் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் மாநாட்டில் கண்டிப்பாக கலந்து கொண்டிருக்க வேண்டும்.

தொலைதூரத்திலுள்ள ஒரு நாட்டின் ஓர் அஹ்மதியின் தூய்மை மற்றும் விசுவாசத்தைப் பாருங்கள்! மார்க்க அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக அவரிடம் இருந்த துடிப்பைப் பாருங்கள்! இதனால் அல்லாஹ் அவர் மீது எவ்வாறு அருள் புரிந்துள்ளான்!

இவர் ஐவரிகோஸ்டைச் சேர்ந்த உமர் சங்காரே சாஹிப் ஆவார். இவர் கூறுகிறார்: அஹ்மதியான பிறகு அல்லாஹ் எனக்கு துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் அடையாளத்தையும், இமாம் மஹ்தி (அலை) அவர்களின் உண்மைக்கான அடையாளத்தையும் மிகுதியாகக் காட்டினான். தினமும் காட்டி வருகிறான்.

அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படுத்துவதே எனது வருகையின் நோக்கமாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர் கூறுகிறார்: இதனால் எனது ஈமானில் வளர்ச்சி ஏற்படுகிறது. ஐவரிகோஸ்டின் ஆண்டு மாநாட்டின் நாட்கள் நெருங்கின. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பயணம் மேற்கொள்ள என்னிடம் வசதி இல்லை. நான் துஆ செய்தேன். அல்லாஹ்வே! உனது மஹ்தி உண்மையாளர் ஆவார். அவரால் தொடங்கப்பட்ட மாநாட்டிற்கு நான் போக வேண்டும்.....

ஆண்டு மாநாட்டின் முக்கியத்துவம் இந்த மக்களிடம் எந்த அளவிற்கு மேலோங்கி இருக்கிறது என்று பாருங்கள்! இதை வைத்து ஒவ்வொருவரும் தன்னை ஆய்வு செய்து பாருங்கள்!

.....உனது மஹ்தியின் உண்மைக்கு அடையாளமாக, உன்னிடமிருந்து எனக்காக பயணத்திற்குத் தேவையானதை வழங்குவாயாக! என்று அவர் துஆ செய்தார். அடுத்த நாள் ஜமாஅத்தைச் சேராத ஒரு சகோதரர் தானும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான தன் விருப்பத்தை தெரிவித்தார். நான் மாநாட்டிற்காகச் செல்லவிருக்கும் ஜமாஅத் குழுவினரிடம் எனது பெயரையும், அந்த நண்பருடைய பெயரையும் கொடுத்தேன். மாநாட்டிற்குச் செல்வதற்கு இரண்டு நாட்களே எஞ்சி இருந்தன. ஆனால் பயணத்திற்கான எந்த ஏற்பாடும் நடக்கவில்லை. காரணம், பயணத்திற்காக பணம் இல்லை. ஆனால் துஆ செய்து வந்தேன். அப்போது நான் பக்கத்தில் ஒரு ஊருக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு ஒரு நபர் என்னைச் சந்தித்தார். நான் நேற்று முதல் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார். அவர் என் கையில் 20,000 ஃபிராங்க் கொடுத்தார். இது உங்களுக்கு என்று கூறினார்.

அல்லாஹ் அந்த மனிதரின் உள்ளத்தில் அவருக்கு பணம் கொடு என்ற சிந்தனையை விதைத்தான். அத்துடன் அவர் கூறுகிறார்: நான் அந்த தொகையை பெற்றுக் கொண்டு அல்லாஹ்வுக்கு நன்றி கூறினேன். இந்தத் தொகையைக் கொண்டு நான் 16,000 ஃபிராங்க் இரண்டு நபர்களுக்கான பயணச் செலவைச் செலுத்தினேன். மீதி 4,000 ஃபிராங்கை பயணச் செலவிற்காக வைத்துக் கொண்டேன்.

அல்லாஹ்வின் இந்த அருள் நிச்சயமாக அவர்களின் ஈமானுக்கு வலுவூட்டக் காரணமாக அமைகிறது. இதை அவரும் குறிப்பிட்டு எழுதியுள்ளார். பைஅத்திற்குப் பிறகு அவர்கள் உலகத்தின் பால் சாய்ந்து விடாமல், இறைவனின் பால் திரும்புவதன் பக்கம் அவர்களை தூண்டியது. அவர்கள் உதவிக்காக மனிதர்களிடம் செல்லவில்லை. மாறாக ஏதாவது வழி செய் என்று இறைவனிடம் தொடர்ச்சியாக துஆ செய்து கொண்டிருந்தார். இதனால் அல்லாஹ் அவருடைய துஆவை ஏற்றுக் கொண்டான். அவருடைய விருப்பத்தையும் நிறைவேற்றினான். ஆகவே இவ்வாறு ஈமானால் உள்ளம் நிரம்பியுள்ள இந்த மக்களிடம் எவ்வாறு சந்தேகத்தை ஏற்படுத்த முடியும்? நவூதுபில்லாஹ். அஹ்மதிய்யத் பொய் என்றும் இறைவன் இல்லை என்றும் எவ்வாறு கூற முடியும்? இவர்களோ ஈமானில் இன்னும் உறுதியாகிக் கொண்டே

செல்கின்றனர். இந்த சம்பவங்களை அவர்கள் தம் சந்ததிகளிடம் கூறும்போது அவர்களின் ஈமானிலும் உறுதிப்பாடு ஏற்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அஹ்மதிகளிடம், தூய மாற்றத்தை உங்களிடம் ஏற்படுத்துங்கள். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின்படி செயல்படுங்கள். அப்போது தான் உங்களுடைய ஈமானைப் பற்றி உங்களுக்கு சரியாகத் தெரியும் என்று அறிவுரை கூறினார்கள்.

ஐரோப்பாவில் வசிக்கும் ஓர் அஹ்மதி குமரிப் பெண்ணின் சம்பவத்தை எடுத்துக் கூறுகிறேன். அவர் தம் ஈமானைப் பாதுகாக்கும் முயற்சியில் அல்லாஹ் அவருக்கு எவ்வாறு வெற்றியை வழங்கி அவருக்கு தன் அருட்கொடையை வழங்கியுள்ளான் என்று பாருங்கள்!

**சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நமது முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகிறார்கள்:**

ஜமாஅத்தின் ஒரு குமரிப் பெண் தொழில் சார்ந்த கல்வி பயின்று வந்தாள். அதற்காக அவள் இரண்டு நாள் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். வாரத்தின் மூன்று நாட்கள் ஒரு பண்ணையில் வேலை கற்க வேண்டும். அந்தப் பண்ணையில் இந்தப் பெண் மட்டுமே முஸ்லிம் ஆவாள். அந்தப் பண்ணையில் அவள் தொழுவதற்காக தனக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தாள். அவள் இந்தப் பண்ணையில் தன் கல்வியைத் தொடங்கிய போது திடீரென்று அந்தப் பண்ணைக்கு வழக்கத்திற்கு மாற்றமாக அதிக இலாபம் கிடைக்கத் தொடங்கியது. அந்தப் பண்ணைக்கு புதிய வாடிக்கையாளர்கள் வரத் தொடங்கினர். மிகவும் குறுகிய காலத்திலேயே அந்தப் பண்ணைக்கு புதிய கட்டிடங்கள் இரண்டும், புதிய வேலையாட்களும் வாடகைக்கு வாங்க வேண்டியது வந்தது. இந்த மாணவி பயின்று வந்த கல்லூரியில் விளையாட்டிற்கு ஒரு வகுப்பு இருந்தது. நீச்சலில் பங்கெடுக்க வேண்டும் என்று இந்த மாணவியை மிகவும் வற்புறுத்தினார்கள். மாணவி மறுத்து விட்டாள். தனியாக இருந்தால் பரவாயில்லை. ஆண்களுடன் நான் நீச்சலில் பங்கெடுக்க மாட்டேன் என்று கூறி மறுத்து விட்டாள். கல்லூரி தரப்பிலிருந்து வற்புறுத்தல் அதிகமாக இருந்தது. ஆனால் இந்த மாணவி அதை ஏற்கவில்லை. தீர்க்கமாக மறுத்து விட்டாள். கல்லூரி அந்தப் பண்ணைக்கு புகார் கொடுத்தது. இதனால் அவள் வேலை செய்து வந்த பண்ணையின் சார்பாகவும் வற்புறுத்தல் அதிகமானது. இது கல்லூரி படிப்பின் ஓர் அங்கமாகும். நீ இதில் பங்கெடுக்கா விட்டால் உன்னை வேலையிலிருந்து நீக்கி விடுவோம் என்று மிரட்டினர். ஆனால் அந்த மாணவி தன் ஈமானில் உறுதியாக இருந்தாள். நீங்கள் என்ன செய்தாலும் சரி, ஆண்களுடன் சேர்ந்து நான் நீச்சலில் பங்கெடுக்க மாட்டேன் என்று கூறி விட்டாள். பின்னர் இவர்களின் போக்கு இன்னும் தீவிரமானது. இதனால் அந்த மாணவி தொந்தரவு தாங்காமல் பண்ணையை விட்டு விலகுவதாக நோட்டீஸ் அனுப்பி விட்டு தம் படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே நிறுத்தி விட்டாள். அந்தப் பண்ணையை விட்டு விலகி தனியார் கல்லூரியில் சேர்ந்து விட்டாள்.

இவள் அந்தப் பண்ணையை விட்டு விலகியதும், அல்லாஹ் வியக்க வைக்கும் வகையில் தன் வல்லமையைக் காட்டினான். இலாபத்தில் இயங்கிக் கொண்டிருந்த பண்ணை நஷ்டமடைய ஆரம்பித்தது. மெல்ல மெல்ல வேலை முடிந்து வந்தது. மக்களை பணி நீக்கம் செய்ய வேண்டியது வந்தது. இறுதியில் இந்த நஷ்டத்திற்கான காரணத்தைக் கண்டறிய கூட்டம் நடத்தப்பட்ட போது அந்த பண்ணையின் M.D. ஒரு அப்பாவியின் சாபம் இந்தப் பண்ணைக்கு கிடைத்ததே இதற்கு காரணம் என்று பகிரங்கமாகக் கூறினார்.

அந்த பண்ணையிலிருந்து யாரோ ஒருவர் இந்த மாணவிக்கு இ-மெயில் மூலமாக கூறினார். அவர் இவ்வாறு எழுதியுள்ளார்: நீ எங்களுடைய பண்ணையை விட்டு விலகிய பிறகு சில நாட்கள் வரை உன்னைப் பற்றி பேசப்பட்டு வந்தது. பிறகு உன்னைப் பற்றி ஒருபோதும் பேசப்படவே இல்லை. இப்போது எம்.டி. உன்னைப் பற்றி ஒரு அப்பாவியின் சாபம் இந்தப் பண்ணைக்கு கிடைத்துள்ளது என்று கூறியதும் மீண்டும் நீயே எல்லாராலும் பேசப்படும் தலைப்பாக இருக்கிறாய். அந்த அப்பாவி நீதான் என்று எல்லாரும் நினைக்கிறார்கள். மேனேஜராக இருந்த பெண்மணி ஒருவர் இந்த மாணவியை மிகவும் அதிகமாக தொந்தரவுபடுத்தினார். அவரை வேலையை விட்டு நீக்கி விட்டனர். அல்லாஹ் இந்த மாணவியின் மீது அதிக அருள் புரிந்தான். இதனால் தனியார் கல்லூரியில் பயின்ற அந்த மாணவி சிறந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றாள். எந்தவித தொந்தரவும் இன்றி தன் படிப்பை முடித்தாள்.

இவர் இறைவனின் விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்கினார். இதனால் அவருடைய உலக விருப்பங்களையும் இறைவன் பூர்த்தி செய்தான். இதில் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற பாடம் நமது குமரிப் பெண்களுக்கு உள்ளது. அல்லாஹ்வின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் வழங்குங்கள். இதனால் அல்லாஹ் அருள் வழங்குவான்.

இங்குள்ள எல்லா விதிகளையும் பின்பற்ற வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. இவர்களிடம் உள்ள நல்லதைப் பெற்றுக் கொள்ளுங்கள். இளைஞர்கள் இதை கவனிக்க வேண்டும். இவர்களிடம் உள்ள தீமைகளிலிருந்து விலகி இருக்க முயற்சி செய்யுங்கள். நீந்துவது குமரிப் பெண்களுக்கு தடையல்ல. ஆனால் பெண்கள் பெண்களுடன் நீந்துங்கள். நீச்சல் பழகுவது நல்ல விசயம். எல்லாருக்கும் நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். இன்றைய நாட்களில் பெண்கள் நீந்துவது தொடர்பாக பேசப்படுகிறது.

எங்கள் தந்தைவழிப் பாட்டியார் என்னிடம் கூறுவார்கள். அந்தக் காலத்தில் நீச்சல் குளம் கிடையாது. வாய்க்காலுக்குச் சென்று நீந்துவார்கள். அவர்கள் மிகச் சிறந்த நீச்சல் வீராங்கணையாக இருந்தார்கள். இது நூறு வருடங்களுக்கு முன்னுள்ள விசயமாகும். அப்போதே அவர்கள் நன்றாக நீந்துவார்கள். up stram – நீச்சல் மிக நன்றாக நீந்துவார்கள். ஆகவே நமது பெண்கள் நீச்சல் படித்துள்ளனர். நம் பெண்கள் நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் பெண்களின் நீச்சல் வேளையில் பெண்கள் மட்டுமே இருக்க வேண்டும். அதற்காக நிர்வாகத்திடம் பேசி ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஐரோப்பாவில் நான் பார்த்திருக்கிறேன். இதற்காக முயற்சி செய்து இதில் வெற்றி கிடைத்துள்ளது.

செயீத் கோவாக்கு சாஹிப் அப்பீல் கோர்ட்டின் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். கானா பார் அசோஸியோசன் இவருக்கு ஒரு பாராட்டு வழங்கினார்கள். அதில் இவ்வாறு எழுதியுள்ளனர். நீங்கள் மனிதர் தான். தவறிழைப்பது சாத்தியமானதாகும். ஆனால் நீங்கள் எந்தவகை ஊழலும் செய்ததில்லை. தீர்ப்பு வழங்கிய பிறகு நன்றி கூறும் விதமாக வழங்கப்படும் அன்பளிப்பையும் நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. உங்களுடைய இயல்பில் ஊழல் செய்வதற்கான பண்பே இல்லை. கானா பார் அசோஸியேசன் உங்களுக்கு நீதிமான், நம்பிக்கைக்குரியவர், கடினமாக உழைப்பவர், Incorruptable Judge அதாவது ஊழலால் கெடுக்க முடியாத நீதிபதி என்ற பெயர் சூட்டி கௌரவிக்கிறது என்று கூறியுள்ளனர்.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பின் அதன் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்பவர்களிடம் ஏற்படும் புரட்சியாகும்.

ஆனால் பாகிஸ்தானிலுள்ள நீதிபதிகளைப் பாருங்கள். அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்குகின்றனர். பின்னர் மல்லவிகளுக்கு அஞ்சி அதை மாற்றி விடுகின்றனர். ஜமாஅத்திற்கு ஆதரவாக இவ்வாறு பல தீர்ப்புகள் வந்துள்ளன. அநீதியிழைக்கப்பட்ட பிரிவுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கிய பின் உயர்நீதி மன்றம் அல்லது உச்சநீதி மன்றம் அந்த தீர்ப்பை மாற்றி விடுகிறது.

யாரும் நம்மைப் பார்த்து விரலை உயர்த்த முடியாது. இந்தப் பெருமை இன்று அஹ்மதிகளுக்கு தான் உண்டு. இதை நாம் இன்னும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் உடன்படிக்கை செய்வதில் ஒன்று, இறைவன் வழங்கிய எல்லா ஆற்றல்களைக் கொண்டு மனித இனத்தின் நன்மைக்காக தொண்டு செய்து வருவேன் என்பதுமாகும். அந்நியர்கள் கூட இதை எவ்வாறு ஒப்புக் கொள்கிறார்கள்! இதற்கான ஓர் உதாரணத்தை நான் வழங்குகிறேன்.

**செரால்யூனின் குடியரசுத் தலைவர், செரால்யூன் ஜமாஅத்தின் 52வது ஆண்டு மாநாட்டில் ஆற்றிய தமது உரையில் இவ்வாறு கூறினார்:**

நான், ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் நிகழ்ச்சியில் அல்ல. மாறாக எனது சமுதாயத்தின் ஒரு முக்கிய நிகழ்ச்சியில் இப்போது கலந்து கொண்டிருப்பதாக மகிழ்ச்சி அடைகிறேன். நாடு மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக அஹ்மதிய்யா ஜமாஅத் ஆற்றி வரும் அருந்தொண்டுகளைப் பாராட்டி அதற்கு மதிப்பளிக்கும் முகமாக இங்கு வந்துள்ளேன். குடியரசுத் தலைவர் என்ற அடிப்படையில் செரால்யூன் அரசு மற்றும் பொதுமக்களின் உள்ளத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காக இருக்கும் மரியாதையை வெளிப்படுத்த வந்துள்ளேன். Love for All, Hatred for None என்ற மோட்டோவை பல ஆண்டுகளாக வெறும் நாவால் கூறி வரவில்லை. மாறாக அதற்கு ஆக்கப்பூர்வமான வடிவம் கொடுத்து வருகிறது. எனது குடிமக்கள் மீது அஹ்மதிய்யா ஜமாஅத் கொண்டுள்ள அன்பின் காரணமாகவே பொதுமக்களுக்கு கல்வி அறிவை புகட்டுவதற்காக ஒவ்வொரு மூலையிலும் பள்ளிக்கூடங்கள் திறந்து வைத்துள்ளது. சமுதாய மற்றும் மத பாகுபாடு ஏதுமின்றி எமது மக்கள் ஜமாஅத்தின் பள்ளிக்கூடங்களிலிருந்து பலன்பெற்று வருகின்றனர்.

Hatred for None என்பதின் மீதுள்ள செயல்பாட்டு முன்னுதாரணமாக மக்களின் உடல்நலத்தைப் பாதுகாப்பதற்காக ஜமாஅத் மருத்துவமனைகளைத் திறந்து வைத்துள்ளது. எவ்வித பாகுபாடுமின்றி எல்லா வகை மக்களும் இந்த மருத்துவமனை -களிலிருந்து பலன்பெற்று வருகின்றனர். இதுவே ஜமாஅத்தின் திறந்த மனப்பான்மைக்கு ஓர் ஆதாரமாகும். உங்களுடன் தோளோடு தோள் சேர்த்து செல்ல வேண்டும் என்றும் இந்த நோக்கங்களில் உங்களுக்கு உதவிட வேண்டும் என்றும் நான் நம்புகிறேன்.

குடியரசுத் தலைவர் என்ற அடிப்படையில் நான் இங்கு வந்துள்ளேன். உங்களுடைய இந்த அருந்தொண்டுகளுக்காக உங்களை வாழ்த்திச் செல்ல வந்துள்ளேன். மேலும் நீங்கள் செய்து வரும் வெகுநாள் தொண்டுகளால் நானும் எந்நாட்டு குடிமக்களும் மிக்க மகிழ்ச்சியாக உள்ளோம். நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு நன்றிக் கடமைப்பட்டுள்ளோம்.

அரபு நாட்டைச் சேர்ந்த பணக்காரர்கள் இன்னும் இங்கு வரவில்லை. ஆனால் ஜமாஅத்திற்கு இங்கு புகழ் பரவி வருவதால் இதை பார்த்து இப்போது சில நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு செல்ல ஆரம்பித்துள்ளனர். உங்களுக்காக நாங்கள் பள்ளிக்கூடங்களும் திறப்போம்; மருத்துவமனைகளையும் திறப்போம்; கல்லூரிகளும் திறப்போம்; இன்னும் பல உதவிகளும் செய்வோம் என்கின்றனர். இவர்களுடைய நீதியின் கண் எப்போதும் விழித்திருக்கும்படி இறைவன் செய்வானாக! இம்மக்கள் மீது இவர்கள் அநீதியிழைக்காது இருக்கட்டுமாக!

அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின்படி செயல்படுபவர்கள் அஹ்மதிகள் என்று அந்நியர்களும் ஒப்புக் கொண்ட சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது.

செரால்யூனின் ஒரு கட்சியின் முன்னாள் தேசியத் தலைவர் அல்ஹாஜ்ஜா ஜமாஅத்தின் 52வது ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய தம் சொற்பொழிவில் இவ்வாறு கூறினார். நான் U.K ஆண்டு மாநாட்டிலும் பலமுறை கலந்து கொண்டுள்ளேன். அங்கு மக்களிடம் உயர்ந்த நல்லொழுக்கம் மற்றும் இஸ்லாமிய போதனைகளின்படி வழிநடப்பதையும் நான் அறிவேன். இதிலிருந்து நான் தெரிந்து கொள்வது யாதெனில், இஸ்லாத்தின் வருங்காலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமே பிரகாசம் அடையும். இதற்கான அத்தாட்சியை நாம் இன்று பார்த்து வருகிறோம். நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் சேராமல் இருந்தாலும் நமது குறைவான அறிவின் காரணமாக ஜமாஅத்தின் போதனை மற்றும் அதன் வளர்ச்சியைப் பற்றி தவறாக கருத்துக்களை தெரிவிக்கக் கூடாது. இந்த மாநாட்டின் மையக்கருத்தையும் இங்கு ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களையும் பார்த்தால், இந்த வாசகங்களை பார்த்தபின், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை உண்மையாக நேசிப்பவர் யாரும் உண்டு என்றால் அது ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களே ஆவார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

மாநாட்டில் கலந்து கொள்பவர் யாராக இருந்தாலும் சரி, இஸ்லாத்தின் ஒளிமயமான எதிர்காலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கைகளிலேயே உள்ளது என்பதை கூறாமல் இருக்க முடியாது என்ற எனது கருத்தை நான் இங்கு பகிரங்கமாக தெரிவிக்கின்றேன் என்று கூறினார்.

இதுவே ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் அழகாகும். இவ்வாறு இருக்கவும் வேண்டும். உண்மையான இஸ்லாம், ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அன்பு மற்றும் அவர்களின் முன்மாதிரியின்படி செயல்படுவதற்கான முயற்சி ஆகியவற்றை அஹ்மதிகள்தான் செய்கிறார்கள் என்று அந்நியர்கள் கூட சொல்கின்றனர்.

ஸ்பெயினிலிருந்து ஆயிசா சாஹிபா எனக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறுகிறார்: நான் எனது அஹ்மதி கணவருடன் என் மாமியார் வீட்டுடன் வாழ்ந்து வருகிறேன். அவர்கள் அனைவரும் அஹ்மதி அல்லாதவர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் கூட்டமாக உட்கார்ந்து கொண்டு புறம் பேசுவார்கள். அப்போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். அவர்களுடன் சேர்ந்து உட்கார்வதை நான் விரும்பமாட்டேன். நான் பைஅத் செய்ததிலிருந்தே ஆண்களிடம் கை குலுக்குவதை விட்டு விட்டேன். அந்நிய ஆண்களின் கூட்டத்தில் உட்கார்வதையும் கைவிட்டு விட்டேன். இது அவர்களுக்கு தவறாகப் படுகிறது. என்னிடம் கடினமாக நடந்து கொள்கின்றனர். அந்நிய ஆண்களுடன் கை குலுக்கக் கூடாது என்று தடை செய்யப்பட்டுள்ளதாக ஹதீஸிலிருந்து ஆதாரம் கேட்கின்றனர். கணவன் மனைவியாகிய நாங்கள் சுதந்திரமாக காலத்தின் இமாமின் போதனைகளின்படி வழிநடக்கும் வகையில் எங்களுக்கு தனி வீடு கிடைத்திட துஆ செய்யுங்கள் என்று எழுதியுள்ளனர்.

ஆக இம்மக்களிடம் ஏற்படும் மாற்றம் இதுவாகும். எந்த அஹ்மதி பெண்ணும் எதற்காகவும் தாழ்வு மனப்பான்மை உணர்வு கொள்ள வேண்டிய அவசியமில்லை. சில நேரம் ஆண்களுக்கு ஸலாம் சொல்ல வேண்டியது ஏற்பட்டு விடுகிறது என்று எண்ண வேண்டாம். ஆண்களிடம் ஸலாம் சொல்ல வேண்டிய தேவையில்லை.

ஆண்களிடம் கை குலுக்குவது தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். அவ்வாறே ஆண்களும் பெண்களுடன் கை குலுக்குவது தவறாகும். பெண்களுடன் கை குலுக்குவதை தவிர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ்வின் அருள்களைப் பெற வேண்டும் என்றால் வெளிப்படையாகப் பார்க்கும் போது சிறியதாகத் தெரியும் கட்டளையையும் செயல்படுத்த வேண்டும்.

**இந்தியாவில் சட்டியாலா என்ற ஊரிலுள்ள ஜமாஅத்தைச் சேர்ந்த அஹ்மதி ஒருவர் எழுதுகிறார்:**

இவர் கோதாவரியின் முபல்லிக் ஆவார். சில தீவிரவாதிகள் நமது பள்ளியைத் தாக்கினார்கள். நமது பள்ளிவாசலை ஆக்கிரமித்தனர். அந்த பள்ளிவாசலை அஹ்மதிய்யா ஜமாஅத் கட்டியுள்ளது. இந்த பள்ளிவாசலில் நாங்கள் இமாமத் செய்வோம். ஆனால் நீங்கள் பள்ளிக்கு வந்து தொழ விரும்பினால் தொழ வரலாம் என்று கூறினார்கள். ஆனால் அல்லாஹ் அந்த மக்களின் உள்ளத்தில் ஜமாஅத்திற்காக ரோசத்தை வைத்திருந்தனர். ஜமாஅத்தைச் சேர்ந்த எந்தவொரு நபரும் அவர்களுக்கு பின்னால் தொழுவதை விரும்பவில்லை. எல்லாரும் நிராகரித்து விட்டனர். அஹ்மதிய்யத்தில் உறுதிப்பாட்டுடன் இருந்தனர். இது மார்க்கத்திற்காக ரோசம் கொள்வதின் ஓர் உதாரணமாகும். காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாதவர்கள், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப வந்த இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாதவரின் பின்னால் நாம் எப்படி தொழ முடியும்? காலத்தின் இமாமை நிராகரித்தவர் பின்னால் நாம் எப்படி தொழுவது? நாம் மனிதர்களை அல்ல. அல்லாஹ்வை திருப்திப்படுத்த வேண்டும். ஆகவே இதற்காக நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். பைஅத்தின் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவர். தம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்தியவர்களும், ஏற்படுத்த முயற்சி செய்பவர்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆவர். நம்மில் ஒவ்வொருவரும் பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுபவராக இறைவன் ஆக்குவானாக!

அல்லாஹ்வுக்கு நெருக்கமாக நம்மை கொண்டு செல்ல ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இருந்த வேதனை உணர்வைப் புரிந்து கொள்பவர்களாக நம்மை ஆக்குவானாக!

அவர்கள் கூறுகிறார்கள்: இந்த போதனைகளை ஒருவருடைய உள்ளத்தில் எட்ட வைப்பது என்னுடைய சக்திக்கு உட்பட்ட பணியல்ல என்று நான் நன்றாக அறிவேன். என்னுடைய கருத்தை ஒருவருடைய உள்ளத்தில் அமர்த்த வைப்பதற்கான எந்த கருவியும் என்னிடம் இல்லை என்பதையும் நான் அறிவேன்.

பிறகு அவர்கள் கூறுகிறார்: ஆயிரக்கணக்கான மக்கள் அன்பிலும் விசுவாசத்திலும் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளனர். ஆனால் சில சமயங்களில் பழைய பழக்கவழக்கங்கள் அல்லது மனித பலவீனத்தின் காரணமாக மார்க்கத்தை விட்டு கவனத்தை குறைத்து விடும் அளவிற்கு உலகச் செல்வங்களை சம்பாதித்து விடுகின்றனர்.

அதாவது அன்பிலும் தூய்மையிலும் மிகவும் வளர்ச்சி பெற்ற மக்கள் உள்ளனர். ஆனால் சில பலவீனங்களை வெளிப்படுத்தி விடுகின்றனர். ஆகவே இந்த பலவீனங்களைப் போக்கிட முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலக விவகாரங்களை ஒன்றுமற்றதாக கருதும் அளவிற்கு முற்றிலும் தூய்மையாகி விடுவதே எமது போதனைகளின் நோக்கமாகும். இறைவனிடமிருந்து விலக்கி விடும் எல்லா வகையான கவனமின்மையும் விலகி விட வேண்டும். இந்த நிலை ஏற்படாத வரை ஆபத்து விலகுவதில்லை. இது நிம்மதிக்குரிய நிலையாகாது.

எனவே நாம் குறிப்பாக நம்மை ஆய்வு செய்வது அவசியமாகும். நமது நிலைகளை இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்வது அவசியமாகும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at Melbourne, Australia

on **11.10.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456